# இலங்கைக் குடியுரிமை பெறுவோம்!

''இலங்கையில் தொடர்ச்சியாக வாழ விரும்பும் சகல மலையக மக்களுக்கும் உடனடியாக பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும். விண்ணப்பம் – விசாரணை என்றெல்லாம் இழுத்தடிக்கப்படக்கூடாது என்பதை நாம் ஆரம்ப காலத்திலிருந்தே வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

ஒரு மக்கள் கூட்டத்தை இந்த நாட்டுக்கு இவ்வளவு பேர் அந்த நாட்டுக்கு இவ்வளவு பேர் என பிரித்து கொள்வதற்கு உலகத்தில் எவருக்கும் அதிகாரமோ, உரிமையோ இல்லை. உயிருள்ள மனிதனை உணர்வற்ற பண்டமாக நினைத்து பங்கு போடுவது மனித குலமே அவமானப்படும் மாபெரும் அநீதியாகும்.

மலையக மக்களை இந்தியாவுக்கு அனுப்ப எடுக்கப்படுகின்ற சகல நடவடிக்கைகளும் அம்மக்களின் விருப்பத்துக்கு மாறானதாகும். இலங்கையில் அடுத்தடுத்து நடந்த இனக்கலவரங்களின் அச்சத்தினால் ''இந்தியாவுக்கு போயாவது எம்மைக் காப்பாற்றிக் கொள்வோம்'' என மலையக மக்கள் இந்தியாவுக்கு விண்ணப்பிக்க நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். அந் நேரங்களில் ''மலையக மக்களை காப்பாற்றுவோம்'' என்று நம்பிக்கை ஊட்டவோ, இவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவோ எவரும் முன்வரவில்லை.

எனவே நிதானமாக சிந்தித்து முழு மன நிறைவோடு முடிவெடுக்க இவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேயில்லை.

இந்தியாவுக்குப் போன எல்லா மக்களும், பெற்றோர்களையும், பிள்ளைகளையும் உற்றார் உறவினர்களையும் பிரிந்துபோகும்சோகத்திலும், எதிர்காலம் என்னவாகுமோ என்ற அதிர்ச்சியிலும் அழுது புலம்பி ஒப்பாரி வைத்துக் கொண்டுதான் ரயில் ஏறினார்கள்.

போனவர்களில் நூற்றுக்கு 10 பேர் கூட இந்திய மண்ணில் நிலையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டதாக அறிய முடியவில்லை.

பல குடும்பங்கள் அனாதைகளாக வீதிகளிலே பிச்சை எடுத்து பிழைக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகி இருப்பதாகத்தான் அறிகின்றோம்.

ஒருவர் நாட்டில் 5 வருட காலம் வாழ்ந்தால் அவருக்கு அந் நாட்டு பிரஜையாவதற்கு உரிமை இருக்கிறது என்று சர்வதேச சட்டம் சொல்லுகிறது.

150 வருட காலம் இந்த நாட்டிலே வாழ்ந்த நமக்கு தொடர்ந்தும் நிரந்தரமாக இங்கேயே வாழ்வதற்கு எல்லா தகுதிகளும் இருக்கிறது. அதை மறுக்கின்ற உரிமை எந்த மனிதனுக்கும் கிடையாது என்பதை மலையக மக்கள் புரிய ஆரம்பித்து விட்டார்கள்.

இதுவரை இந்தியாவுக்குப் போக நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள் இன்று தங்கள் முடிவை மாற்றிக் கொள்ளவே விரும்புகிறார்கள்.

இதையே கடந்த பொதுத் தேர்தலில் நாம் எல்லா மேடைகளிலும் பகிரங்கமாகக் கூறினோம்.

இந்நிலையில் ''இந்திய கடவுச் சீட்டுகளை புதுப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை'' இன்று தலவாக்கொல்லை தோட்டப் பகுதிகளில் விநியோகிக்க தொடங்கியிருக்கிறார்கள்.

'நிரப்பி தராதவர்களுக்கு தோட்டத்தில் வேலை வழங்கப்பட மாட்டாது' என சில தோட்ட நிர்வாகிகள் எச்சரித்திருப்பதாகவும் அறிகின்றோம். இப்படி பயமுறுத்தி நாடு கடத்த நினைப்பதை அடிப்படை மனித உரிமைகளை மதிக்கின்ற எவரும் அனுமதிக்க மாட்டார்கள்.

அதனை நிரப்புவதன் மூலம் இந்தியாவுக்கு போவதையே நாம் விரும்புகிறோம் என்பதாகிவிடும்.

* அச்சுறுத்தலுக்கு அடிபணியாதீர்கள்!
* பொய்ப் பிரசாரங்களுக்கு பயந்து விடாதீர்கள்!!!
* ஏமாற்று வார்த்தைகளில் மயங்கி விடாதீர்கள்!!!
* எமது தலைவிதியை நாமே தீர்மானித்துக்கொள்ள இது இறுதி சந்தர்ப்பம்!
* இந்த நாட்டின் குடிமகனாவோம்!
* எல்லா உரிமைகளையும் பெறுவதற்கு விழித்தெழுவோம்!!

பெ. சந்திரசேகரன்
மலையக மக்கள் முன்னணி
தலவாக்கொல்லை
17-03-1989

குமரன் அச்சகம் கொழும்பு - 12